1990 மார்ச் 24]

வீட்டு மனைகளாகவும், கால்நடைத் தொழுவங்களாகவும் மாறி யிருக்கிற நிலங்களை ஆயக்கட்டுப் பகுதியிலிருந்து அரசு நீக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது குறித்து புலத் தணிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர் களுடைய ஒரு அறிக்கையை 30-6-1990-க்குள் தர வேண்டு மென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. ஏ. கணேசமூர்த்தி : தலைவர் அவர்களே, தற்போது கீழ்பவானி பாசனப் பகுதியில் உரிய ஆயக்கட்டுப் பகுதி எவ் வளவு ஏக்கர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தற் போது பாசனம் பெறுவது, ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 909 ஏக்கர்.

தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள்

*5241—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள் எந்தெந்த பகுதிகளில் வாழ்கிறார்கள்?

(ஆ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் ஆதிவாசிகள் வசிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) அவர்களுக்கு அரசு சலுகைகளும் முன்னேற்றத் திட் டங்களும் ஏன் செயல்படுத்தப்படவில்லை.?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி, தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி (பழங்குடி) மக்கள் 6,012 பேர்கள் சீர்காழி, மயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், கும்பகோணம், நன்னிலம், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, மன்னார்குடி, திருவாரூர், நாகப்பட்டிணம், திருத் துறைப்பூண்டி, வேதாரண்யம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய வட்டங்களில் வாழ்கின்றனர்.

(ஆ) மற்றும் (இ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் வசிக்கும் 201 மக்கள் ''சிந்தி வலையர்'' எனப்படும் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இனம் பழங்குடியினர் பட்டி யலில் இடம் பெறவில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற 1,012 பேர்கள், அதிலே வேதாரண்யம் பகுதியில் மட்டும் ஆதிவாசிகளாக 201 பேர் இருப்பதாக அரசு தெரிவித்திருக்கிறது. அந்த 201 பேரும் ''சீந்தி வலையர்'' என்ற கம்யூனிட்டி என்றும் அரசு தெரிவிக்கிறது. அவர்கள் இன்னமும் பட்டியலில் இடம் பெறாதது அவர்களுடைய குற்றம் கிடையாது. அந்த மக்களை உடனடியாக, பிரெசிடென்ஷியல் நோட்டிபிகேஷன் மூலமாக பட்டியலில் இடம் பெறச் செய்து, அவர்களுக்குரிய சலுகைகளை உடனடியாக, அந்த டிரைபல்ஸ்க்கு நிச்சயம் தர வேண்டும். அன்றைக்கு சர்தார் வேதரத்தினம் பிள்ளை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர்களுக்கு வீடு கொடுத்ததுதான் 30, 40 ஆண்டுகளுக்கு முன்னாள். அதற்குப் பின்னால் அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அங்கே கிடையாது, என்பதை இங்கே குறிப்பிடவிரும்புகிறேன். அவர்களுடைய இன்றைய சூழ்நிலைகளைத் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தினுடைய ஆந்திரபாலசிஸ்ட் யாரையாவது அணுகி இந்த அரசு தமிழ் பல்கலைக்கழகத்தின் மூலமாகவும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழக அரசு அதை எடுத்துப்பார்த்துமத்திய அரசுக்கு உணர்த்துவதற்கான நடவடிக்கையை செய்யு மா என அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும் அவர்கள் மிகவும் அழுத்தப்பட்ட நிலையில் உள்ள சமுதாயத்தினராக இருக்கின்ற காரணத்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்ய இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய முறையிலே அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். அதேபோல் தான் நாகைத் தொகுதியில் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் அச்சக்கரையார் என்ற ஒரு பகுதியினர் ஒரு சிறிய பகுதி மக்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களை எஸ். சி. யாக கூட இப்போது அங்கீகரிக்கப்படவில்லை. அதையும் பரிசீலித்து அவர்களை மிக மிக பின்தங்கிய பட்டியலிலாவது, அல்லது எஸ். சி. பட்டியலிலாவது சேர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா? சிறு பகுதி எண்ணிக்கையில் அச்சக்கரையார் என்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்தப் பகுதி மக்களுக்கு இந்தச் சலுகைகளை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*261—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரசு அனுமதி வழங்கிய பெரியார் மாவட்டம் ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு கொடைமேடு அருகில் பவானி ஆற்றிலிருந்து நீர் பெறப்படும். இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி, வாரியத்தால் வழங்கப்பட்டப் பின், பணிகள் தொடங்கப்படும். இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு தொகை எவ்வளவு? இந்த திட்டத்தால் எத்தனை கிராமங்கள் பயன் பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு 1.08 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 131 கிராமங்கள் பயன் அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக 1-9-1989 ஆம் தேதி செயற்பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த செயற்பொறியாளர் அலுவலகம் 9-9-1989-ல் ஏனோ அங்கே இருந்து மாற்றப்பட்டு விட்டது. ஆகவே அந்த செயற்பொறியாளர் அலுவலகத்தினை